©
GOVERNMENT OF TAMIL NADU
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 54] CHENNAI, THURSDAY, FEBRUARY 25, 2016
Maasi 13, Manmadha, Thiruvalluvar Aandu–2047

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES.

### மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர், திருநெல்வேலி மாவட்டம்.

**திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், கே.ஆலங்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் பதவி நீக்கம் செய்தல் குறித்த அறிவிக்கை.**

*(ந.க.எண் அ6/1646/2012.)*

**No. VI(2)/18(a)/2016.**

திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், கே.ஆலங்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. அ.கண்ணன், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வேலை அடையாள அட்டை வழங்கிட நடவடிக்கை எடுக்க தவறிய காரணத்தினால் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205 உட்பிரிவு(11)—ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரால் கே.ஆலங்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் திரு. அ.கண்ணன் என்பவரை பதவி நீக்கம் செய்து இதன் மூலம் அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 262(1)—ன் கீழ் இந்த பதவி நீக்கம் குறித்த அறிவிப்பு ***தமிழ்நாடு சிறப்பு அரசிதழில்*** வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994 பிரிவு 205(12)—ன் கீழ் இந்த பதவி நீக்க அறிவிக்கை தமிழ்நாடு அரசிற்கு மேல் முறையீடு செய்ய விரும்பினால் ***தமிழ்நாடு அரசிதழில்*** பதவி நீக்கம் குறித்த அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.

திருநெல்வேலி,
2016 பிப்ரவரி 25.

**மு. கருணாகரன்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (54)